*Let the mind manage the body*
*Que l'esprit gère le corps*

**TAMIL**
**(Subject code No. P170)**

**Index Number:** ..............................................................................

# MAURITIUS EXAMINATIONS SYNDICATE

## Primary School Achievement Certificate Assessment

**October 2019**

**Time: 1 hour 45 minutes**

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Check that this assessment booklet contains **9** questions printed on **18** pages.
2. Write your Index Number on the assessment booklet in the space provided above.
3. You should not use red, green or black ink in answering questions.
4. Write all your answers clearly in the assessment booklet.
5. Attempt **all** questions.


| Question | Marking | | | Revision | | | Control | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Marks | | Sig | Marks | | Sig | Marks | | Sig |
| 1A | | | | | | | | | |
| 1B | | | | | | | | | |
| 2A | | | | | | | | | |
| 2B | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4A | | | | | | | | | |
| 4B | | | | | | | | | |
| 5A | | | | | | | | | |
| 5B | | | | | | | | | |
| 6 | | | | | | | | | |
| 7A | | | | | | | | | |
| 7B | | | | | | | | | |
| 8 | | | | | | | | | |
| 9 | | | | | | | | | |
| **Total** | | | | | | | | | |
| **Sig (HoG)** | | | | | | | | | |

© Mauritius Examinations Syndicate

Marks

**Question 1 A (5 marks)**

**படத்தைப் பார்த்து, அதன் பொருத்தமான சொல்லைக் கோடிட்ட இடத்தில் எழுது.**




நாற்காலி















Please turn over this page

Marks


**Question 1 B (5 marks)**


**கீழ்க்காணும் படத்தைச் சரியான சொற்றொடரோடு இணை.**












பையன்கள் தங்கள் மிதிவண்டிகளை ஓட்டுகிறார்கள்.

அமுதா கடையில் சில ரொட்டிகள் வாங்குகிறாள்.

பூனை தூங்குகிறது.

அகிலனும் தேவியும் பேருந்தில் போகிறார்கள்.

ஆசிரியை பாடத்தை விளக்குகிறார்.

செல்வி மருத்துவரைப் போய்ப் பார்த்தாள்.

**Question 2 A (10 marks)**

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

(எ-டு): வேலன் ...................... ஒரு பை இருக்கிறது.

அ. முதுகு இ. முதுகில்

ஆ. முதுகுகள் ஈ. முதுகின்

க. மாணவன் ...................... எழுதுகிறான்.

அ. பேனாவில் இ. பேனாவால்

ஆ. பேனாவின் ஈ. பேனாவுக்கு

உ. ...................... ஓர் ஐந்தாம் தர மாணவி.

அ. நாங்கள் இ. அவள்

ஆ. நீங்கள் ஈ. அவர்கள்

ங. எங்களால் தோட்டத்தில் உட்கார முடியாது. ......................, மழை பெய்கிறது.

அ. அல்லது இ. ஆனால்

ஆ. ஏனென்றால் ஈ. ஆகவே

ச. போன வாரம் வள்ளி ஓர் அழகான படத்தைப் ...................... .

அ. பார்க்கிறேன் இ. பார்ப்பாள்

ஆ. பார்க்கிறாள் ஈ. பார்த்தாள்

ரு. நான் என் நண்பர்களைச் சந்திக்கும்போது, நாங்கள் சேர்ந்து

..................... .

அ. விளையாடுவாய் இ. விளையாடுவார்கள்

ஆ. விளையாடுவோம் ஈ. விளையாடினேன்

சு. அம்மா உணவைச் ..................... எனக்குக் கொடுத்தார்.

அ. சமைத்து இ. சமைத்தாள்

ஆ. சமைக்கும் ஈ. சமைத்த

எ. பாட்டி ..................... பலகாரத்தைச் சுட்டார்.

அ. இனிப்பைப் இ. இனிப்பாய்ப்

ஆ. இனிப்பாகப் ஈ. இனிப்பான

அ. நேற்று ..................... விழாவுக்கு வந்தார்?

அ. என்ன இ. எது

ஆ. யார் ஈ. எந்த

கூ. ..................... அருகில் பல வீடுகளைக் காணலாம்.

அ. வயல்கள் இ. வயல்களில்

ஆ. வயல்களால் ஈ. வயல்களுக்கு

க0. அத்தை காய்களும் ..................... வாங்கி வந்தார்.

அ. பழங்களும் இ. பழங்கள்

ஆ. பழங்களுக்கு ஈ. பழங்களில்

**Question 2 B (5 marks)**

**கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. செந்தில் ...................... செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அ. விளக்கில் இ. வானொலியில்

ஆ. விசிறியில் ஈ. குளிர்பதனப் பெட்டியில்

உ. செல்வன் கதை நூல்களைப் படிக்க .......................ச் சென்றான்.

அ. மருத்துவமனைக்கு இ. சந்தைக்கு

ஆ. கடைக்கு ஈ. நூலகத்துக்கு

ங. தேநீர் என்மீது விழுந்தது; அதனால், என் ஆடைகள் ...................... இருக்கின்றன.

அ. அழுக்காய் இ. அழகாய்

ஆ. சுத்தமாய் ஈ. புதிதாய்

ச. நான் தூங்க விரும்புகிறேன். ஏனென்றால், எனக்கு மிகவும் ...................... .

அ. தாகம் இ. வெப்பம்

ஆ. பசி ஈ. களைப்பு

ரு. நீ மிகவும் வேகமாய் ......................! நீ விழுவாய்.

அ. சாப்பிடாதே இ. பார்க்காதே

ஆ. ஓடாதே ஈ. எழுதாதே

Marks

**Question 3 (10 marks)**

**கீழ்க்காணும் விளம்பரத்தைக் கவனமாகப் படி:**

**சுயாக் அரசாங்கப் பள்ளி**

**சுற்றுலாப் பயணத்துக்குப் போவோம்**

நீங்கள் ஆறாம் தரத்தில் இருக்கிறீர்களா? சுயாக் அரசாங்கப் பள்ளி நடத்தும் சுற்றுலாப் பயணத்துக்கு வாருங்கள்!

**பயணத்தின் திட்டங்கள்:**

தேதி: வியாழக்கிழமை,18ஆம் தேதி, மார்ச்சு மாதம், 2019

பேருந்து பள்ளியிலிருந்து புறப்படும் நேரம்: 09 00

பேருந்து திரும்பும் நேரம்: 16 00

பேருந்து கட்டணம்: ஐம்பது ரூபாய்




**பார்க்கப் போகும் இடங்கள்:**

- பாம்பிளெமூசு தோட்டம்
- போட்லூயிசு சந்தை

**நீங்கள் கொண்டுவர வேண்டியவை:**

- உங்கள் உணவுப்பை
- ஒரு தொப்பி
- உங்கள் நீச்சல் ஆடை

பன்னிரண்டு மணிக்கு நீங்கள் கிரான்பே கடற்கரைக்குப் போவீர்கள். அங்கே நீங்கள் பகல் உணவைச் சாப்பிடலாம்; கடல்நீரில் விளையாடலாம்.

நீங்கள் போக விரும்புகிறீர்களா? 2019ஆம் ஆண்டில் மார்ச்சு மாதம், வெள்ளிக்கிழமை 12ஆம் தேதிக்குள் உங்கள் பெயரைத் தலைமை ஆசிரியருக்குக் கொடுங்கள்!

**கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை எழுது.**

க. எந்தப் பள்ளி இந்த விளம்பரத்தை எழுதியது?

..........................................................................

Marks

உ. எந்தத் தர மாணவர்கள் இந்தச் சுற்றுலாப் பயணத்துக்குப் போகலாம்?

……………………………………………………………………………..

ஊ. எந்தத் தேதியில் சுற்றுலாப் பயணம் இருக்கும்?

……………………………………………………………………………..

ச. பேருந்து எத்தனை மணிக்குப் பள்ளியிலிருந்து புறப்படும்?

……………………………………………………………………………..

ரு. பேருந்து கட்டணம் எத்தனை ரூபாய்?

……………………………………………………………………………..

சு. மாணவர்கள் பார்க்கப் போகும் ஓர் இடத்தைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………..

எ. சுற்றுலாப் பயணத்துக்கு மாணவர்கள் கொண்டுவர வேண்டிய இரண்டு பொருட்களை எழுது.

(i) …………………………………………………………………

(ii) …………………………………………………………………

அ. மாணவர்கள் பகல் உணவை எங்கே சாப்பிடுவார்கள்?

……………………………………………………………………………..

கூ. மாணவர்கள் சுற்றுலாவுக்குப் போக விரும்பினால், யாருக்குப் பெயரைக் கொடுக்க வேண்டும்?

……………………………………………………………………………..

**Question 4 (15 marks)**

**தந்துள்ள பகுதியைக் கவனமாகப் படி:**

போன வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணிக்கு அகிலன் பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பினான். அவன் வீட்டை அடைந்ததும், தொலைக்காட்சியைப் போட்டான். அவனுக்குப் பிடித்த படம் தொடங்கப் போகிறது.

சிறிது நேரத்துக்குப் பிறகு அவன் அம்மா அவனிடம் பேச வந்தார். அம்மாவுடைய குரல் வேறு மாதிரி இருந்தது என்று அகிலன் கவனித்தான்.

"அகிலன் என் உடம்பு சரியில்லை. எனக்குக் காய்ச்சல் ஏற்பட்டது. என் தொண்டை வலிக்கிறது," என்று அம்மா சொன்னார்.

"அம்மா! கவலைப்படாதீர்கள். நீங்கள் போய்த் தூங்குங்கள்," என்று அகிலன் அம்மாவிடம் கூறினான்.

சில மணித்துளிகளுக்குப் பிறகு அகிலனுடைய அப்பா வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பினார். அவர் மனைவியுடைய உடம்பு சரியில்லை என்று அறிந்துகொண்டு கவலை அடைந்தார். "நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் மருத்துவரைப் போய்ப் பார்க்கத் தேவை இல்லை. எனக்கு ஓய்வு மட்டும் வேண்டும்," என்று அம்மா அப்பாவிடம் சொன்னார். அப்பாவும் மகனும் அதைக் கேட்டு ஆறுதல் அடைந்தார்கள். "நாம் வீட்டு வேலை செய்வோமா?" என்று அப்பா அகிலனிடம் கேட்டார்.

"சரியுங்கள் அப்பா," என்று அவன் பதில் அளித்தான். அவனால் தன் படத்தைப் பார்க்க முடியாது. அதனால், வருத்தம் அடைந்தான். ஆனால், தன் அம்மாவுக்கு உதவி செய்ய மிகவும் முக்கியமானது.

"நான் சாமான்களைக் கழுவுவேன்; அறைகளைப் பெருக்குவேன். நீங்கள் கூடத்தைச் சுத்தம் செய்யலாம்; இரவுச்

சாப்பாட்டைத் தயாரிக்கலாம்," என்று அகிலன் தன் அப்பாவிடம் கூறினான்.

நேரம் கழிக்காமல் அகிலன் துடைப்பான் எடுத்து எல்லா அறைகளையும் பெருக்கினான். இது முடிந்த பிறகு அவன் எல்லாச் சாமான்களையும் கழுவினான். அதே நேரத்தில் அப்பா கூடத்தைச் சுத்தம் செய்தார். அவர் கூடத்தைச் சுத்தம் செய்த பிறகு ஒரு சுவையான இரவுச் சாப்பாட்டைத் தயாரித்தார்.

ஆறு மணிக்கு வீடும் கூடமும் சுத்தமாக இருந்தன. மேசைமேல் சூடான சாப்பாடு இருந்தது. அகிலனுடைய அம்மா ஓய்வு எடுத்தார். அவர் எழுந்தபோது பெருமையாக இருந்தார்.

"எனக்கு ஓர் அன்பான குடும்பம் இருக்கிறது," என்று அவர் மகிழ்ச்சியுடன் கூறினார்.

**Question 4 A (5 marks)**

**அ. ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் சரியானது. அச்சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. அகிலன் வீட்டை அடைந்ததும், அவன் ............................. .

அ. தன் அம்மாவைத் தேடினான்

ஆ. தொலைக்காட்சியைப் போட்டான்

இ. தூங்கப் போனான்

ஈ. கூடத்தைச் சுத்தம் செய்தான்

உ. அவனுடைய அம்மா உடம்பு சரியில்லை என்று அகிலன் அறிந்தான்; ஏனென்றால், .............................. .

அ. வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டும்

ஆ. இரவுச் சாப்பாடு இன்னும் தயாரிக்கவில்லை

இ. அவர் உணவைச் சாப்பிட விரும்பினார்

ஈ. அவருடைய குரல் ஒரு மாதிரி இருந்தது

ஊ. அப்பா தம் மனைவியின் உடம்பு சரியில்லை என்று அறிந்தவுடன் அவர் .............................. .

அ. கவலையாய் இருந்தார்

ஆ. மகிழ்ச்சியாய் இருந்தார்

இ. பெருமையாய் இருந்தார்

ஈ. களைப்பாய் இருந்தார்

எ. இரவுச் சாப்பாடு மிகவும் **நன்றாக** இருந்தது. இதைக் குறிக்கும் ஒரு சொல்: ..............................

அ. சுவையாக

ஆ. வலியாய்

இ. சுத்தமாய்

ஈ. முக்கியமாக

ரு. அகிலன் அம்மாவுக்கு உதவி செய்ய ……………… .

அ. மருத்துவரை அழைத்தான்

ஆ. சாமான்களைக் கழுவினான்

இ. பள்ளிக்குப் போனான்

ஈ. தொலைக்காட்சியைப் போட்டான்

**Question 4 B (10 marks)**

**ஆ. கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவுக்கும் விடை எழுது.**

க. அகிலனுடைய அம்மாவுக்கு என்ன ஏற்பட்டது? [1]

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

உ. அம்மாவுக்கு அதிகமாக உடம்பு சரியில்லை என்று எவ்வாறு அறிந்துகொள்ளலாம்? [1]

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

ங. அகிலனின் பண்பைப் பற்றிக் கீழ்க்காணும் **இரண்டு பொருத்தமான விடைகளை** வட்டமிடு. [2]

| | |
|---|---|
| பொறுமை உள்ளவன் | நேர்மை உள்ளவன் |
| அன்பு உள்ளவன் | உதவி உடையவன் |

ச. அப்பா அம்மாவுக்கு உதவி செய்ய என்ன செய்தார்? [1]

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

ரு. கதையின் அடிப்படையில் கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை ஒழுங்காக எழுது. பொருத்தமான எண்ணைக் கட்டத்தில் எழுது. ஓர் எடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டது. [3]

| | |
|---|---|
| - அகிலனுடைய அப்பா வேலையிலிருந்து வந்தார். | |
| - அகிலன் பள்ளியிலிருந்து வந்தான். | **1** |
| - “என் உடம்பு சரியில்லை,” என்று அம்மா அகிலனிடம் சொன்னார். | |
| - அகிலனுடைய அம்மா ஓய்வு எடுத்த பிறகு எழுந்தார். | |

சூ(அ). கதையின் இறுதியில் அகிலனுடைய அம்மா எழுந்தபோது எப்படி இருந்தார்? [1]

..........................................................................................................

..........................................................................................................

(ஆ). அவர் ஏன் அப்படி இருந்தார்? [1]

..........................................................................................................

..........................................................................................................

**Question 5 A (4 marks)**

**(அ) கீழ்க்காணும் சொற்றொடர்களில் உள்ள சொற்களை ஒழுங்காக எழுது.**

க. அடுத்த நாள் பள்ளியில் இருக்கும் என் இசை புதன்கிழமை.

……………………………………………………………………

……………………………………………………………………

உ. ஏறிப் மாம்பழங்களைப் பல வேலன் பறித்தான் மாமரத்தில்.

……………………………………………………………………

……………………………………………………………………

**Question 5 B (6 marks)**

**(ஆ) கீழ்க்காணும் தொடர்களை முடிக்க.**

க. மாணவன் தன் பயிற்சிகளை எழுதிய பிறகு

……………………………………………………………………

உ. அரசி திடலில் விளையாடும்போது ……………………………

……………………………………………………………………

ங. அண்ணன் ஒரு விழாவுக்குப் போவார்; அதனால், ……………


……………………………………………………………………

**Question 6 (10 marks)**

**இந்தப் பகுதிக்குக் கீழே பத்து சொற்கள் தரப்பட்டுள்ளன. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பகுதியில் உள்ள கோடிட்ட இடத்தில் எழுது. ஒவ்வொரு சொல்லையும் ஒரு முறை மட்டும் பயன்படுத்த வேண்டும்.**

அன்று இரவு. நான் என் .......................... வீட்டுப் பயிற்சிகளை எழுதிக் கொண்டிருந்தேன். வீட்டில் உள்ள மற்றவர்கள் ..........................க் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு .......................... சத்தம் கேட்டேன். அது என் பெற்றோரையும் என் தம்பியையும் .......................... . அச்சத்தம் தோட்டத்திலிருந்து வந்தது. தோட்டத்தில் ஒரு திருடன் இருக்கிறான் என்று நாங்கள் .......................... . நேரம் கழிக்காமல், நாங்கள் எல்லாரும் ..........................த் தேடிக் கொண்டிருந்தோம்.

நான் .......................... பயந்தேன். திருடன் இரவில் வந்து திருடுவதைப் பற்றிக் ..........................க் கேட்டேன். நாங்கள் ஐந்து ..........................த் தோட்டத்தில் தேடினோம். ஆனால், திருடனைப் பார்க்கவில்லை. கடைசியில் நாங்கள் சில வெளவால்கள் நம் லெட்சி .......................... பறந்து போவதைப் பார்த்தோம். அப்போதுதான் உண்மைத் திருடர்கள் யார் என்று நாங்கள் அறிந்துகொண்டோம்.



வெளவால்கள் - bats

**நினைத்தோம், அவனை, கதைகளை, மணித்துளிகளுக்கு, தூங்கி, மரத்திலிருந்து, பெரிய, எழுப்பியது, மிகவும், அறையில்**

**Question 7 A (5 marks)**

**(அ) அடிக்கோடுள்ள சொற்களில் பிழைகள் உள்ளன. அவற்றைத் திருத்திக் கோடுள்ள இடத்தில் எழுது.**

க. அந்தச் சிறுவன் **சத்தை** ........................... நீல நிறம்.

உ. அக்கா வாங்கிய **வளையல்** ........................... அழகானவை.

ங. அவர் எந்தப் பேருந்தில் **ஏரினார்**? ...........................

ச. இந்தத் தென்னை மரத்தில் **பறவைகளுக்குக்** ........................... காணலாம்.

ரு. வெள்ளிக்கிழமைதோறும் அம்மா விளக்குகளை **ஏற்றுவேன்.** ...........................

**Question 7 B (5 marks)**

**(ஆ) வளைக்கோட்டில் உள்ள சொல்லைத் திருத்திக் கோடுள்ள இடத்தில் எழுது.**

க. அது ஒரு மிகப் பெரிய ........................... . **(கதவுகள்)**

உ. அவன் ...........................ப் போய் ஒரு நூலை வாங்கினான். **(கடை)**

ங. போன ஆண்டு சிற்றப்பா நன்றாக ........................... வீட்டைக் கட்டினார். **(உழை)**


ச. மாமன் ........................... கடிதத்தை நான் படித்தேன். **(எழுது)**

ரு. நாளைக்கு நானும் நீயும் நிகழ்ச்சியைப் போய்ப் ..................... . **(பார்)**

Marks


**Question 8 (10 marks)**

**கீழ்க்காணும் ஒவ்வொரு படத்துக்கும் சொற்கள் தரப்பட்டுள்ளன. அச்சொற்களைக் கொண்டு ஒரு சொற்றொடர் அமைத்து எழுது.**




நேற்று - சுற்றுலாப் பயணம் செய்

______________________________




திடீரென்று - நிறுத்து

______________________________




அப்போது - அழை

______________________________



பிறகு - உதவி

______________________________



கடைசியில் - மகிழ்ச்சி

______________________________

**Question 9 (10 marks)**

**தந்துள்ள குறிப்புகளைக் கொண்டு 10 வரிகள் அளவில் ஒரு கட்டுரை எழுது.**

- தெருவில் நடந்து போதல்
- ஒரு பணப்பையைப் பார்த்தல்
- அதில் பெயரும் கைபேசி எண்ணும் இருத்தல்
- நீ என்ன செய்தாய்?
- கடைசியில் என்ன நடந்தது?

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

………………………………………………………………………………

**BLANK PAGE**